பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

UTHAYAN

சுடர்: 5 பிரமோதூத ஹூ ஐப்பசி மீ 28 உ புதன்கிழமை (14 11 · 1990) ஹிஜ்ரி 1410 ற. ஆகிர் 4 கதிர் 252

# வ.பி.போ.ச. ஊழியருக்கு சம்பளம் வழங்க மறுப்பு!

## 1,700 பேர் நிர்க்கதி நிலையில்

யாழ்ப்பாணம், நவம்பர் 14

வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாது என்று மத்திய போக்குவரத்துச் சபை மறுத்து விட்டது.

வ. பி. போ. சபை பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்தி ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை மத்திய போக்குவரத்துச் சபை அதிகாரிகள் எடுத்துள்ளனர்.

இதேவேளை, வ. பி. போ. சபையின் உயர் அதிகாரிகள் இருவர் இம் மாதம் 21 ஆம் திகதி கொழும்பில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் கீழ் இயங்கும் ஏழு சாலைகளிலும் (டிப்போக்களிலும்) மொத்தம் 1,700 ஊழியர்கள் பணி புரிகின்றனர். இவர்களில் பயிற்சி பெறாத தொழிலாளரும் அடங்குவர்.

இவர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்கு மாதாந்தம் 31 லட்சம் ரூபா தேவை யுத்தம் தொடங்கிய பின் வடக்கில் போக்குவரத்துச் சேவை முற்றாக ஸ்தம்பித்தது. வருமானம் இருக்கவில்லை.

அதனைத் தொடர்ந்து ஜூன், ஜூலை மாதச் சம்பளங்களுக்குப் பொதுவாக, மத்திய போக்குவரத்துச்சபை 50 லட்சம் ரூபாவை வழங்கியது. ஆகஸ்ட் மாதத்தில் இருந்து இதுவரை வ.பி.போ. சபை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை.

கொழும்பில் இப்போதுள்ள அரசாங்க அதிபர், நேற்று, மத்திய போக்குவரத்துச்சபை உயர் அதிகாரிகளிடம் வ. பி. போ. சபை ஊழியர்களின் நிலையை எடுத்துரைத்து, சம்பளம் வழங்குவதற்குப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஒய்வூதியருக்கு ரூ.200 இம்மாதம் இடையாது!

அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ள 200 ரூபா அலவன்ஸ் யாழ்- மாவட்ட ஓய்வூதியர்களுக்கு இம் மாதம் கிடைக்காது

செயலக ஓய்வூதியக் கிளை அதிகாரி ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அடுத்த மாதத்திலேயே இந்தக் கொடுப்பனவு [நிலுவையுடன் சேர்த்து] வழங்கப்படும் என்று அந்த அதிகாரி தெரிவித்தார். [இ-3]

## கஷ்ட நிவாரணப் படி மேலும் 3 மாதங்களுக்கு!

கொழும்பு, நவ 14

வடக்கு - கிழக்கு மாகாண அரச, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு மேலும் மூன்று மாதங்களுக்கு கஷ்ட நிவாரணப்படி வழங்கப்பட இருக்கிறது

ஜூன் 14 ஆம் திகதி முதல் மூன்று மாதங்களுக்கு மேற்படி நிவாரணப்படி வழங்குவதற்கு முன்னர் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

மேலும் மூன்று மாதங்களுக்கு கஷ்ட நிவாரணப் படியை தொடர்ந்து வழங்குமாறு பொது, நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சு சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளது.

கடந்த அக்டோபர் 31 ஆம் திகதியிடப்பட்ட (இல. 37/90 [1] )சுற்று நிருபம் கொழும்பில் வெளியான போதிலும், இன்னும் யாழ்ப்பாணம் வந்து சேரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-3)

## அரசாங்க ஊழியருக்கும் உலர் உணவு நிவாரணம்

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ்- மாவட்டத்தில் உள்ள அரச, கூட்டுத்தாபன, சபை ஊழியர்களுக்கும் உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட இருக்கிறது.

யாழ்- அரச அதிபர் திரு அன்ரன் அல்பிரட் கொழும்பில் அத்தியாவசிய சேவைகள் நாயகம் உட்பட முக்கிய அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து அரச ஊழியர்களுக்கும் நிவாரணம் வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

ஊழியர்கள் பெறும் சம்பளம் கணக்கில் எடுக்கப்படாமல் ஒருமாத காலத்துக்கு வாராந்தம் இந்த நிவாரணம் வழங்கப்படும்.

இந்த விடயத்தை யாழ்- அரச அதிபர் நேற்று யாழ்- மேலதிக அரச அதிபர் திரு கே. சண்முகநாதனுக்கு கொழும்பில் இருந்து அறிவித்துள்ளார். (இ-3)

## திருமலையில் மோதல்; இரு சிப்பாய்கள் பலி!

யாழ்ப்பாணம், நவ. 14

கடந்த சனியன்று திருகோணமலை மாவட்டத்தில் உள்ள வில்கம் விகாரை இராணுவ முகாமிலிருந்து வெளியேறி கன்னியா பக்கம் சென்ற இராணுவத்தினர் மீது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் இரண்டு சிப்பாய்கள் உயிரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மணல் ஆறு பகுதியில் தாக்கு; இராணுவ வாகனம் சேதம்!

யாழ்ப்பாணம், நவ 14

மணல் ஆறு பகுதியில் டொலர்பாம் முகாமில் இருந்து முந்திரிகைக்குளம்நோக்கி லாண்ட் றோலர் வாகனம் ஒன்றில் சென்ற இராணுவத்தினர் வழிமறித்துத் தாக்கப்பட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை விடுதலைப் புலிகள் நடத்திய இந்தத் திடீர்த் தாக்குதலில் 4 சிப்பாய்கள் காயமடைந்தனர். காயமடைந்த சிப்பாய்கள் அங்கிருந்து தப்பி ஓட்டம் பிடித்தனர்.

இராணுவத்தினர் வந்த வாகனம் பலத்த சேதமடைந்தது.

அங்கிருந்து ரி 81 மகஸின் - 3, ஏ கே: ஹோல்லர் - 1, ஐ. எம். ரவை - 100, ஹெல்மட் – 1, ஜே. ஆர். ரக கிரனேட் – 2 ஆகியவை கைப்பற்றப்பட்டன என்று விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. [ஓ]

## வவுனியாவில் தமிழர்கள் இரவில் நடமாடத் தடை!

வவுனியா நகரை அண்டிய சில கிராமங்களில் உள்ள தமிழ் மக்கள் இரவு நேரங்களில் நடமாடப் படையினர் தடை விதித்துள்ளனர்,

வைரவப் புளியங்குளம், குருமண்காடு, கரப்பங்காடு ஆகிய கிராமங்களுக்கே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது

இப்பகுதிகளில் மாலை 6 மணியிலிருந்து மறுநாள் காலை 6 மணி வரை எவரும் வெளியில் நடமாடக் கூடாது என்றும், அயல் வீட்டுக்கு கூடச் செல்லக் கூடாது என்றும் படையினர் அறிவித்துள்ளனர். [ஒ 3]

## நாளை முதல் நான்கு ரூபா

பத்திரிகைத் தாள் விலை ஆறு மடங்காக உயர்ந்து விட்டது. எரிபொருள் விலை நாளாந்தம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. அதனால் உதயனை வெளியிடுவதற்கான ஆகு செலவு எம்மால் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்குப் பெருகிவிட்டது

அதன் காரணமாக; எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட நிலையில் உதயனின் விலையை 50 சதத்தால் உயர்த்த நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். நாளை முதல் உதயனின் விலை நான்கு ரூபாவாக இருக்கும் என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

வாசகர்களை எம்முடன் ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

— நிர்வாகத்தினர்

## இராணுவம், பொலீஸுக்கு மேலும் ஆட்சேர்ப்பு!

### 6 வாரங்களுக்கு ஒரு தடவை 3,500 பேர்

கொழும்பு, நவ 14

ஆறு வாரங்களுக்கு ஒரு தடவை பொலீஸ் மற்றும் இராணுவச் சேவைக்கு 3 ஆயிரத்து 500 பேர் சேர்க்கப்பட்டு, பயிற்சி அளிக்கப்படும்.

தங்காலையில் நடந்த கூட்டம் ஒன்றில் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு பேசுகையில், பொலீஸ் மற்றும் முப்படைகளுக்குச் சேர்க்கப்படுவோரில் ஜனசக்தி பெறும் குடும்பங்களில் உள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்– என்று சொன்னார்.

புதிதாகச் சேர்க்கப்படுபவர்களுக்கு பயிற்சிக் காலம் நான்கு மாதங்களில் இருந்து இரண்டு மாதங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

அவசரமாக கூடுதல் துருப்புகள் தேவை என்பதால் பயிற்சிக் காலம் குறைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது [இ-எ]

## ஹெலித் தாக்கு

வலி வடக்குப் பகுதியில் பரவலாக நேற்று ஹெலி 'கலிபர்' தாக்குதல்களை நடத்தியது.

ஏழாலை வடக்கு, மல்லாகம் பகுதிகளை நோக்கி ஷெல் வீச்சும் நடத்தப்பட்டது.

காங்கேசன்துறைப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் கேட்டன. [ஒ 68]

## மின்சாரம் கிடைக்கும் சாத்தியம் தெரிகிறது!

யாழ்ப்பாணம், நவ. 14

குடாநாடு மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பகுதிகளுக்கு மீண்டும் மின்சாரம் கிடைக்கும் சாத்தியம் தென்படுகிறது.

மாங்குளம் இராணுவ முகாம் அருகேயுள்ள மின் கோபுரம், கேபிள்கள் ஆகியவை சேதமடைந்திருந்தன.

அவற்றைத் திருத்துவதற்கு பல தடங்கல்கள், கஷ்டங்கள் இருந்து வந்தன.

தற்பொழுது அங்கு திருத்த வேலைகளைச் செய்வதற்கு கூட்டுப் படைத் தலைமையகத்தின் அனுமதியும் கிடைத்துள்ளது.

யாழ் அரச அதிபர் கொழும்பில் நடத்திய பேச்சுக்களை அடுத்தே அனுமதி கிடைத்துள்ளது. [ஒ 3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து சந்திரசேகருடன் பேச்சுவார்த்தை

## இ. காங்கிரஸ் எம். பி. நடத்தினார்

புதுடில்லி, நவ. 14
இந்திரா காங்கிரஸ் எம்.பி இரா. அன்பரசு கடந்த திங்கட்கிழமை பிரதமர் சந்திரசேகரைச் சந்தித்து, இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி பேச்சுக்கள் நடத்தினார்.

அன்பரசுடன் இலங்கைத் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் சிலரும் இச்சந்திப்பின்போது கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழர்மீதான இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துமாறு இலங்கை அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளவேண்டும் என்று திரு அன்பரசு பிரதமரை கேட்டுக்கொண்டார்.

இலங்கை - இந்திய உடன்பாட்டை அமுல் நடத்துவது குறித்து இந்திய அரசு அக்கறை எடுக்கவேண்டும் என்றும்—

தமிழ்ப்போராளிகளை புதுடில்லிக்கு அழைத்து பேச்சுக்கள் நடத்தவேண்டும் என்றும் தி. அன்பரசு பிரதமர் சந்திரசேகரை கேட்டுக்கொண்டார். (இ-எ)

## மீண்டும் 'டெங்கு' காய்ச்சல்

நாட்டில் டெங்கு மற்றும் வயிற்றோட்டம் ஆகிய நோய்கள் மீண்டும் தீவிரமாகப் பரவும் அபாயம் ஏற்பட்டு இருப்பதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு இந்த எச்சரிக்கையை விடுத்து உள்ளது.

சுத்தமான நீரைப் பருகுவதன் மூலம் நோய்கள் பரவுவதைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் அமைச்சு ஆலோசனை கூறியுள்ளது. (உ-எ)

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்துக்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விஷேட சழிவுண்டு) "மண்டேலா ரேடர்ஸ்". இல. 256A, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (14550)

### மல்லிகை வெள்ளி விழா மலர்

படிக்கலாம் பாதுகாக்கலாம், பரிசளிக்கலாம், பல்வேறு நாடுகளுக்கும் அனுப்பலாம். உள்ளடக்கச் செழுமைமிக்க மலர். உயர் வகுப்பு மாணவர்களுக்குப் பயனுள்ளது. வேறு புத்தகங்களும் கிடைக்கும். மல்லிகை 243B, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (14725)

### அறிவித்தல்

யாழ்ப்பாணம் ஜுபிலி பசாரில் இயங்கி வந்த சிங்கர் கிளை மீண்டும் அதே இடத்தில் இயங்குகின்றது என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். (14723)

### டில்க்கா வாச் வேக்ஸ் [Dilka Watch Works]

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டையிலும் 3, சித்தன்கேணி வீதி, பண்டத்தரிப்பிலும் இயங்குகின்றது. சுவர் மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகலஎலக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்கு உண்டு. (14613)

### லைடன் ரெக்ஸ்ரைல்ஸ் சென்ரர்

மேற்படி ஸ்தாபனம் மீண்டும் முன்னைய பினான்ஸ் கம்பெனி கட்டடத்தில் (249, மின்சார நிலைய வீதி) தமது விற்பனையை 5-11-90 முதல் ஆரம்பித்துள்ளதுடன், நத்தார் பண்டிகையை முன்னிட்டு மலிவு விற்பனையும் நடைபெறுகிறது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். [சி/5402]

### கல்வி

G. C. E (O/L) கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 24 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் தொடர் வகுப்புக்கள் மூலம் குறைந்த காலத்தில் விஷேட சித்திக்குக் கற்பிக்கப்படும் மற்றும் பாலர் வகுப்பிலிருந்து A/L வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படும் எனது வீட்டிலும் தனிப்பட்ட வகுப்புகள் நடைபெறுகின்றன ஆறுமுகநாதன் 10, கச்சேரி, கிழக்கு ஒழுங்கை சுண்டுக்குளி. (14755)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

12 - 11 - 90 அன்று காலை மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையடியில் பெண்களின் கைக்கடிகாரம் ஒன்று கண்டு எடுக்கப்பட்டுள்ளது உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி உடன் பெற்றுக் கொள்ளவும். த. சப்புத்துரை Co இ ஆறுமுகம் பண்ணாகம், சுழிபுரம். (14757)

### ரெயிலர் தேவை

நிரந்தரமாக வேலை செய்ய நல்ல பழக்கமுள்ள ஜென்ஸ் ரெயிலர் உடன் தேவை நேரில் வரவும். ஜெயபதிகாம் ரெக்ஸ், அந்தோனியார் கோவிலடி, மானிப்பாய். அநுபவமுள்ள இடம் பெயர்ந்தோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். (14289)

### FUDO

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் - விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும் FUDO, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் கிளை: பிரதான வீதி, மானிப்பாய். (C/5398)

### தவறிவிட்டது

546312984V இலக்கமுடைய கந்தையா சந்திரவதனி ஆகிய எனது அடையாள அட்டை சேரதிவு இறங்கு துறையில் தவறிவிட்டது; எடுத்தவர் ... சீரணி சண்டிலிப்பாய் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (14761)

### விளம்பரதாரருக்கு வேண்டுகோள்

உங்கள் விளம்பரங்கள் உரிய திகதியில் வெளி வருவதற்கு-
ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு -
கடைசி நாள் வரை காத்திராமல்,
மூன்று, நான்கு தினங்களுக்கு முன்னரே உங்கள் விளம்பரங்களை எங்கள் கருமபீடத்தில் ஒப்படைக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

—நிர்வாகத்தினர்.
உதயன் வெளியீட்டகம்.

BECON
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)
கலை, வர்த்தகம்
A/L 90, 91
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
ஆரம்பம்: 17 - 11 - 1990
சனி 8.00 A.M.
A/L 90 Day Class
ஆரம்பம்: 16-11-90
வெள்ளி 8.00 A.M.
[14715]

### பாடசாலைகளில் சேவையில் உள்ள 2 ஆம், 3 ஆம் தர அதிபர்களுக்கான

## பதவி உயர்வு

சேவையில் தற்போதுள்ள மேற்படி அதிபர்களுக்கான பதவி உயர்வு விண்ணப்பங்கள் 1990-09 28ஆம் திகதியிட்ட 630 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது அதன் பிரகாரம் விண்ணப்ப முடிவு திகதி 1990- 10 29 ஆம் திகதியாகும்.

யாழ். மாவட்டத்திற்கு வர்த்தமானி 1990 - 11-9ஆம் திகதியன்று கொழும்பு சென்று பெற்றவரிடமிருந்து கிடைத்துள்ளது. யாழ் மாவட்டத்திலுள்ள 2ஆம், 3 ஆம் தர அதிபர்கள் தமது விண்ணப்பங்களை வர்த்தமானியில் உள்ளபடி தயாரித்து தங்கள் பகுதி கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கு ஊடாக 1990- 11- 20 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேசக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கவும். விண்ணப்பங்கள் யாவும் கல்விச் சேவை ஆணைக்குழுவிற்கு வர்த்தமானித் தாமதம் பற்றி எடுத்துக் கூறி அனுப்ப ஆவன செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உதாசீனம் செய்தால் அல்லது வர்த்தமானி கிடைக்கவில்லை என்று அசிரத்தை காட்டினால் முடிவு திகதிக்கு பிந்தும் பட்சத்தில் எவ்வித மேன்முறையீடும் பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வர்த்தமானியின் நிழற்படப்பிரதி (போட்டோ பிரதி) யாழ். கல்வித்திணைக்கள ஈ.ரி. கிளையில் உள்ளது.

இ. சுந்தரலிங்கம்
வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்.
11- 11- 90 [சி/5410]

### ஆறாவது நினைவஞ்சலி



சின்னத்தம்பி விக்கினேஸ்வரன்
தோற்றம்: 06 - 05 - 1961
மறைவு: 14 - 11 - 1984

குடும்பத்தின் முதல் மகனே. குலத்தின் ஒளி விளக்கே நாம் தனித்து விட்டோம் ஆறாண்டு காலம் உருண்டோடி விட்டதப்பா.

உன்னை இழந்து தவிக்கும்;
பெற்றோரும், சகோதரர்களும்.
கி. சின்னத்தம்பி,
புஸ்ப இல்லம்,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி (14749)

# மரண அறிவித்தல்கள்

### முத்துக்குமாரு ஐங்கரன் (கதிர் மாஸ்ரர்)

வட்டுக்கோட்டை மேற்கைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை முத்துக்குமாரு (குலசேகரம்) சரோஜினி அவர்களின் புதல்வனும், சிசுபாலன் (சுவிஸ்), குபேரன் (கனடா), சிறிதரன், திருக்குமரன், சிவபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுந்தரம் தயா தாமோதரம்பிள்ளை அவர்களின் பேரனுமாகிய ஐங்கரன் 12-11-1990ல் அகால மரணமானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-11-1990 இல் நடைபெற்றது என்பதனை அறியத்தருகின்றோம். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தா. முத்துக்குமாரு,
வீரபத்திரகோவிலடி,
வட்டு மேற்கு,
சித்தங்கேணி. [14735]

### அந்தோனிப்பிள்ளை சிங்கராயர் (ராசா)

சில்லாலை கிழக்கைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை சிங்கராயர் காலமானார்.

இவர் திரேசம்மாவின் அன்புக்கணவரும், ஜோசப்ரட்ணம் (ஜேர்மனி), மரிய கொறற்றி, மேரி மெக்டலீன் (சுவிஸ்), எட்வேட் லூயிஸ் (பிரான்ஸ்), மரிய கரோலின், யூஜின் சிலோஜினா ஆகியோரின் அன்புத் தந்தையும், திரேசா லில்லிமலர் (ஜேர்மனி) தாசீசியஸ் தேவராசா (K. C. W.), பிரான்சிஸ்குமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆன் சுபாசினி (ஜேர்மனி), சோபியா (ஜேர்மனி), ஜெயதர்சன், ஜெய டினேஸ் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் புதன்கிழமை 14-11-90 இன்று பிற்பகல் 3 மணியளவில் சில்லாலை புனித யாகப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தே. தாசீசியஸ் தேவராசா.
சில்லாலை கிழக்கு,
பண்டத்தரிப்பு. [14756]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## எந்த வகை?

யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரி மருந்துக் களஞ்சியத்தில் போதிய மருந்து வகைகள் இல்லை. அதன் விளைவாக அங்கு சிகிச்சைக்கு வரும் நோயாளர்களுக்கு, டாக்டர்கள் நிர்ணயித்துக் குறிப்பிடும் மருந்துகளில் அரைவாசிக்குக் குறைவாகவே கொடுக்கப்படுகின்றன.

ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன் என்பர். அரை மருந்து சாப்பிட்டவன்...? மேலும் நோயாளி ஆவான். மருந்து என்பது ஓர் அளவில் - ஒரு பிரமாணத்துடன் - உட்கொள்ளப்பட வேண்டியது. அந்த அளவு கூடும்போது நோயாளியின் உடம்பில் பாரதூரமான பாதிப்புகள் ஏற்படுவது போலவே, அளவு குறையும் போதும் உடற்கூற்றியல் சிக்கல்கள், உபாதைகள் உண்டாகும்.

யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரியில் நாளாந்தம் இரண்டாயிரம் நோயாளர் சிகிச்சை பெறும் அளவுக்கு இப்போது அது சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கியுள்ளது. அதன் பலனாக தினமும் பெரும் எண்ணிக்கையான நோயாளர் அரை குறை மருந்துகளை உட்கொண்டு மேலும் நோயாளிகள் ஆகப்போகிறார்கள்! குளிக்கப்போய் சேறு பூசியவர்களாகிறார்கள்.

இப்படி ஒரு பாரதூரமான பாதிப்பு உண்டாவதற்குக் காரணம்? எட்டு மாதங்களுக்கு ஒதுக்கப்பட்ட மருந்து வகைகளில் எதுவும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து சேரவில்லை!

காலாண்டு ரீதியில்தான் ஆஸ்பத்திரிகளுக்கு மருந்து வகைகள் ஒதுக்கப்படுகின்றன. இந்த வருடத்தில் முதற் காலாண்டின் மருந்துகள் இதுவரை வந்துகொண்டிருக்கின்றன. நாலாவது காலாண்டின் ஒரு மாதம் ஓடிய பின்னரும், மூன்று காலாண்டுகளுக்கு உரிய மருந்தில் எதுவும் வந்து சேரவில்லை.

யுத்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி, வடபகுதித் தமிழர்களை மறைமுகமாக மடியச் செய்யும் அரசின் ஒரு சூழ்ச்சியாகவே இதனைக் கொள்ளவேண்டும். அதனைத் தவிர வேறு வகைப்படுத்த முடியாது. அரைமாதம் இல்லை; ஒரு மாதம் இல்லை; எட்டு மாதங்களாக மருந்து இல்லை; அனுப்பவில்லை என்றால் அதனை வேறெப்படி வகுப்பது?

தமிழர்களின் உரிமைப் பிரச்சினையை—இனப்பிரச்சினையை — தீர்ப்பதற்கு அவர்களை அழித்துவிடுவது தான் உரிய வழி என்ற கொடூரக் கோட்பாடு அரசிடமும், அதன் அதிகாரிகளிடமும் இறுகி, உறைந்து, பதிந்துவிட்டது. அதன் பிரதிபலிப்பு அரசியல், நிர்வாகத் துறைகளில் எல்லா அம்சங்களிலும் பரவிவருகிறது.

அதனால் தான், நோயாளிக்குச் சிகிச்சை அளிப்பது என்ற, உயிரைக் காப்பது என்ற, மனிதாபிமானச் சேவையான ஆஸ்பத்திரித் துறையிலும் இவ்விதம் மறைமுகச் சூழ்ச்சி நடக்கிறது! இந்த லட்சணத்தில் தான் சிங்கள அரசாங்கங்களினதும் அதிகாரிகளினதும் தேசிய ஒருமைப்பாடும், இன ஐக்கியமும் செயற்படுகின்றன.

# உணவு முத்திரைக்குரிய பொருள்: சங்கங்கள் வெளியில் வாங்கலாம்

## செயலக மாநாட்டில் அனுமதி

யாழ்ப்பாணம், நவ. 14

உணவு முத்திரைக்குரிய பொருள்களை, ப.நோ.கூ. சங்கங்கள் வெளிச் சந்தையில் கொள்வனவு செய்ய அனுமதிக்கப்படும்.

செயலகத்தில் திங்களன்று நடந்த கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

கடந்த ஐந்து மாதங்களாக உணவு முத்திரைகளுக்குரிய பொருள்களை விநியோகிக்க முடியாத நிலையில் ப.நோ.கூ. சங்கங்கள் இருப்பது தெரிந்ததே.

இது குறித்து செயலகத்தில் நடந்த கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது. அதைத் தொடர்ந்தே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

உதவி அரசாங்க அதிபர்கள், ப.நோ.கூ. சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட பிரஸ்தாப கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய முக்கிய முடிவுகள் வருமாறு:-

★ உணவு முத்திரை விநியோகத்துக்காக ப.நோ.கூ. சங்கங்கள் வெளிச்சந்தையில் கொள்வனவு செய்யும் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்தல்.

★ ஆறாம் இலக்க உணவு முத்திரைக்கும் உணவுப் பொருள் விநியோகத்தை மேற்கொள்ளல்.

★ உலர் உணவு நிவாரண விநியோகத்தை எதிர்வரும் 25 ஆம் திகதிக்குள் பூர்த்தி செய்ய சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். [அ-3]

## நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 14

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளுக்கு செஞ்சிலுவைச் சங்கம் தெரிவு செய்ய இருக்கும் வைத்திய அதிகாரிகள், உதவி வைத்திய அதிகாரிகள், சுகாதாரப் போதனாசிரியர், தாதிகள் ஆகியோருக்கான நேர்முகப் பரீட்சைகள் இன்று புதன்கிழமை காலை நடைபெற இருக்கின்றன.

யாழ். செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும். (ஓ-3)

# அமெரிக்க நிறுவனத்தின் புனர்நிர்மாணத்திட்டம் நிறுத்தம்

யாழ்ப்பாணம், நவ. 14

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மேற்கொண்டு வந்த சகல புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகளையும் உடனடியாக நிறுத்துவதாக "யு எஸ் எயிட்" அறிவித்துள்ளது.

87 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் ஏற்பட்ட சேதங்களை புனரமைப்பதற்கு "யு. எஸ். எயிட்" (அமெரிக்க) நிறுவனம் மூன்று வருடத் திட்டம் ஒன்றை ஆரம்பித்து இருந்தது. பிரஸ்தாப திட்டத்திற்குரிய வேலைகள் 1990 வரை தொடர்ந்து நடைபெற ஏற்பாடாகி இருந்தது.

வீடமைப்பு, நீர்ப்பாசனத் திட்டங்கள் புனரமைப்பு, தொழில் முயற்சிக்கு உதவுதல் போன்றவையும் அடங்கி இருந்தன.

திட்டமிடப்பட்ட வேலைகளில் 40 வீதமான வேலைகள் மட்டுமே கடந்த ஜூன் வரை பூர்த்தியாகி இருந்தன. அவ்வேலைகளை நிறுத்துவதென அந்த அமைப்புத் திடீரென அறிவித்துள்ளது. [அ-3)

## அதிபர் தரம் வெற்றிடங்கள்:

# விண்ணப்ப முடிவு திகதியை மேலும் நீடிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம். நவ 14

அதிபர் தரம் 1, 2 வெற்றிடங்களை ஏற்கனவே அதிபர் தரம் 2 3 இல் உள்ளவர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்வதற்கான விண்ணப்ப முடிவுத் திகதியை மேலும் நீடிக்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்விச் சேவை ஆணைக்குழுவைக் கோரியுள்ளது.

அத்துடன் இப் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு விரும்பும் அதிபர் தரம் 2, 3 ஐச் சேர்ந்தவர்கள் அதற்கான விண்ணப்பப் படிவத்தை நல்லூரில் அமைந்துள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைமைப் பணிமனையிலிருந்து இன்று புதன்கிழமை முதல் பெற்றுக் கொள்ளலாம் எனறும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் எழுத்து மூலப் பரீட்சையில் சித்தி பெற்று நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டும் அதிபர் தரம் 1, 2 இல் சித்தியெய்தாதவர்கள் தமக்கு விளைவிக்கப்பட்ட அநீதிகளை விளக்கி கல்விச் சேவை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்யும்படியும், அம் மேன்முறையீட்டுக் கடிதத்தின் பிரதியை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைமைப் பணிமனைக்கும் அனுப்பி வைக்கும்படியும் பொதுச் செயலாளர் த. மகாசிவம் கோரியுள்ளார்.

சங்கத்திற்குக் கிடைக்கும் மேன்முறையீட்டுக் கடிதங்கள் தொடர்பாக சங்கம், கல்விச் சேவை ஆணைக்குழுவின் தலைவர் திரு. ஜோர்ஜ் மெண்டிஸ் உடன் தொடர்பு கொண்டு ஆவன செய்யுமென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ)

## நீதிபதியாக நியமனம்

கொழும்பு, நவ. 14

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் மேல் நீதிமன்ற நீதிபதியாக திரு பொன்னுசாமி பாலவடிவேல் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

திரு. பாலவடிவேல் யாழ் மாவட்ட நீதிபதியாக முன்னர் பணிபுரிந்து வந்தார். (உ-எ)

## திருடச் சென்றவர்கள் நடத்திய அட்டகாசம்

### வீட்டுக்காரர்களுக்கு காயம்!

யாழ்ப்பாணம், நவ. 14

திருட்டுக்குச் சென்ற இருவர் வீட்டில் இருந்தவர்களை அடித்துக் காயப்படுத்திவிட்டு, தப்பியோடிவிட்டனர்!

இணுவில் பகுதியில் ஞாயிறு நள்ளிரவு 12-30 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

நடராசா இரத்தினராசா [59 வயது], அவரது மாமனாரான சுப்பிரமணியம் நடராசா [68 வயது] ஆகியோரே இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

நேரம் நள்ளிரவு 12-30 மணி. வீட்டின் குசினி ஓட்டைப் பிரித்துக் கொண்டு திருடர்கள் இருவர் புகுந்தனராம்.

அந்த இருவரும் பின்னர் குசினியிலிருந்து உள் அறைப் பக்கமாக வந்துள்ளனர்.

அப்போது வீட்டில் இருந்தவர்கள் அரவம் கேட்டு, சத்தமிடவே, கையில் இருந்த இரும்புக் கம்பியால் பலமாகத் தாக்கிவிட்டு, தப்பி ஓடிவிட்டனர். [ஓ-15]

## விலை குறைப்பு

யாழ்ப்பாணம், நவ.14

தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் அறிமுகம் செய்யப்பட்ட இரட்டைச் சூட்டடுப்பின் விலை தற்போது குறைக்கப்பட்டுள்ளது.

இதனைப்பெற விரும்புவோர் தங்கள் பகுதி கிராமிய உற்பத்திக் குழுக்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-6)

## சிப்பாய் காலை இழந்தார்

கடந்த சனியன்று அம்பாறை மாவட்டத்தில் மாந்தோட்டம் என்ற இடத்தில் விடுதலைப் புலிகள் வைத்த மிதிவெடியில் சிக்கி இராணுவச் சிப்பாய் ஒருவர் கால் இழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## ஆசிரியர் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 14

நல்லூரில் அமைந்துள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைமைப் பணிமனையில் இன்று புதன்கிழமை காலை 10-00 மணிக்கு கூட்டம் ஒன்று நடைபெற இருக்கிறது.

ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. [ஓ-3]

## வீடுகள் தகர்ப்பு

யாழ்ப்பாணம், நவ. 14

மாவிட்டபுரம் பகுதியில் நேற்று முன்தினம் பொது மக்களின் நான்கு வீடுகளை இராணுவத்தினர் குண்டு வைத்துத் தகர்த்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [illegible]

# மக்களை - மண்ணை நேசிக்கும் கல்விக்கொள்கையே எமக்கு தேவை

## மறுமலர்ச்சிக் கூட்டத்தில் யோகி

போராட்டத்தோடு மாறுபடாது, மக்களையும் மண்ணையும் நேசிக்கும் கல்வியே இன்று நமக்குத் தேவை. இன்றைய கல்விக் கொள்கை உழைப்பை விற்கத்தான் எமக்குக் கற்றுத் தருகிறது. கூட்டு மனப்பான்மையை வளர்க்கவில்லை; சுயநலத் தன்மையையே வளர்க்கிறது. எனவே, இந்தக் கல்விக் கொள்கை மாற்றியமைக்கப்படவேண்டும்.

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மறுமலர்ச்சிக் கழகக் கூட்டத்தில் உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் யோகி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு யோகி மேலும் கூறியதாவது:-

[illegible]

கல்வியுடன் முரண்பட்டு நிற்பவர்கள்: என்ற தப்பான கருத்து ஒன்று நிலவி வருகிறது. ஆனால், உண்மை நிலை வேறு.

நாம் பாடசாலைகள் திறக்கப்படுவதற்கு ஆதரவாகவே உள்ளோம். அடிப்படைக் கல்வி அவசியம் என்பதில் எமக்கு முரண்பாடு எதுவுமே இல்லை.

ஆனால் கல்வி எமது மக்களுக்காக, மண்ணுக்காகப் பயன்படாது போகும் போது தான் முரண்பாடு எழுகிறது.

கற்கப்படுகின்ற கல்வி; கற்கப்படும் விதம் சரியற்றது என்பது தான் எமது கருத்து.

போராட்டத்துக்கு அறிவு பயன்பட வேண்டும்; போராட்டத்துடன் அறிவை பகிர்ந்து கொள்ளுங்கள்.

ஒரு காலத்திலே நாம் வலிமை பெறும்போது எமது அமைப்பு புதிய கல்வித் திட்டம் ஒன்றை முன்வைக்கும்.

இப்படி அவர் கூறினார். (இ - 6)

# ஊர்காவலர் உதவியுடனேயே முஸ்லிம் மீளக் குடியேற்றமாம்

கொழும்பு, நவ. 14

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து, அவர்களை ஊர்காவல் படையினராக முதலில் அனுப்பிவிட்டே, அகதிகளாக இருக்கும் முஸ்லிம் மக்கள் சொந்த கிராமங்களுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்படுவர்.

அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா, புத்தளம் மற்றும் கற்பிட்டி பகுதிகளில் தங்கியுள்ள மன்னார் முஸ்லிம் அகதிகள் மத்தியில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார். (இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் பாதுகாப்பு வழங்குவதினால் தான் தமிழ் எம்.பிக்கள் இங்கு தங்க முடிகிறது

## ரஞ்சன் சபையில் சொன்னது

கொழும்பு, நவ. 15

நாம் பாதுகாப்பு வழங்குவதால் தான் தமிழ் எம். பிக்கள் இன்று கொழும்பில் இருக்க முடிகிறது.

பாதுகாப்பு துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினா நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு – கிழக்கு நிலைமை பற்றி நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் விவாதம் நடந்தது.

அப்போது பதிலளித்து அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா பேசினார்.

அவர் சொன்னதாவது;

முஸ்லிம்களை இனியும் தவறாக வழிநடத்திச் செல்லக் கூடாது.

இன்றுள்ள நிலையில் முஸ்லிம்கள் தங்களுக்கு உள்ளேயே பிளவுபட்டுள்ளனர்.

### சிறையில் போடமுடியும்

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவர் நினைத்தபடி எல்லாம் நடந்து வருகிறார். அவரைப் பிடித்துச் சிறையில் போட என்னால் முடியும். அகதிகளை கவனிக்க அரசாங்கம் உள்ளது. ஆத்திரமூட்டும் பேச்சுக்களை நிகழ்த்தக்கூடாது.

விடுதலைப் புலிகளுடன் அரசு சண்டையிட்டு வருவதால் தான் ஈ. பி. ஆர். எல். எப் இயக்கம் இங்கு இருக்கக் கூடியதாக உள்ளது.

ஈ. பி. ஆர். எல். எப்பினர் யாழ்ப்பாணம் போக முடியுமா? அவர்கள் அங்கு போனால் அவர்களுடைய கழுத்து இருக்காது. அங்கு அவர்கள் போய்வர முடியுமா? என்று சவால் விடுகிறேன்.

ஈ பி ஆர்.எல்.எப் எம்பி திரு சுரேஷ் பிரேமச்சந்திரன்: அரசு அவர்களுக்கு ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் கொடுத்து உதவியது. அதனால் தான் நாம் அங்கு போகமுடியாதுள்ளது.

ரஞ்சன்: உங்கள் எல்லாருக்கும் இந்தியா ஆயுதங்கள் தந்தது

பிரேமச்சந்திரன்: நீங்கள் எல்லோரும் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை கொடுத்தீர்கள்

### இந்திய ஆயுதங்கள்

ரஞ்சன்: நாம் அவர்களுக்கு ஆயுதங்களைக் கொடுக்கவில்லை. இந்தியாவிலிருந்து நீங்கள் ஆயுதங்களைக் கொண்டு வந்து விடுதலைப் புலிகளிடம் கொடுத்தீர்கள். நீர் வாயை மூடிக் கொண்டு இரும்.

ரஞ்சன்: ஒரு கட்டத்தில் நீங்கள் ஓடிவிட்டீர்கள். ட்ரெயிலர் கணக்கில் ஆயுதங்களை நீங்கள் கொடுத்தீர்கள். உங்கள் எல்லாருக்கும் இந்தியா தந்த ஆயுதங்களில் 1 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களை நாம் கைப்பற்றினோம்.

பிரேமச்சந்திரன்: அவற்றை இப்போது நீங்கள் பாவித்து வருகிறீர்கள்?

ரஞ்சன்: ஆம் பாவித்து வருகின்றோம். இந்தியர்கள் உங்களுக்கு தந்த ஆயுதங்கள் தான் அவை.

நிமல் சிறிபாலடி சில்வா (சு.க.எம்.பி): விடுதலைப்புலிகள் ஏன் வரிகளை விதிக்கிறார்கள்?

ரஞ்சன்: வாயை மூடிக் கொண்டு நீர் இரும். உமக்கு என்ன தெரியும்?

டி சில்வா: நீர் வாயை மூடிக்கொண்டு இரும். பாதுகாப்பு விஷயத்தையே குழப்பியடித்து விட்டீர்.

ரஞ்சன்: 1956 இல் சுதந்திரக்கட்சி செய்த தவறைத் திருத்தி வருகிறோம். காயத்துக்கு மருந்து கட்டுகிறோம். சிங்களவர்களைப் பற்றி பிரேமச்சந்திரன் எப்படி பேச முடியும்? நான் தமிழர்களின் நலனையும் கவனித்து வருகிறேன். உங்களை யாரென்று நீங்கள் நினைத்துக் கொண்டீர்கள்............ ''ராஸ்கல்''

பிரேமச்சந்திரன்: அமைச்சர் 'ராஸ்கல்' என்கிறார். அதனை வாபஸ் வாங்கவேண்டும்.

கமிட்டித் தலைவர் ஆரிய ரெக்காவ: ''ராஸ்கல்'' என்ற வார்த்தையை வாபஸ் வாங்குங்கள்.

பிரேமச்சந்திரன்: அமைச்சர் இன்னும் வாபஸ் வாங்கவில்லை

கமிட்டித் தலைவர்; அமைச்சர் வாபஸ் வாங்கி விட்டார்.

### ஓடினார்கள்

ரஞ்சன்: ஈ பி. ஆர். எல். எப். தான் சிந்தித்துச் செயல்படவில்லை. ஒரிஸ்ஸாவிற்கு ஓடி விட்டார்கள். பெருமாள் போதுமான அளவு தீமை விளைவித்துவிட்டார். என்னை ஆத்திரப்படச் செய்யவேண்டாம் நீங்கள் [illegible] பத்தையோ உருவாக்கினீர்கள்

நாம் பாதுகாப்பு வழங்குவதால்தான் தமிழ் எம்.பிக்கள் எல்லோரும் கொழும்பில் இருக்கமுடிகிறது.

யாழ்ப்பாணத்துக்குப் போய் திரும்பி வாருங்கள். என்னை அவர் (பிரேமச்சந்திரன்) விமர்சிக்கிறார்.

டிசில்வா: விமர்சிக்கும் உரிமை எம்.பிக்களுக்கு உண்டு.

ரஞ்சன்; அது அநீதியான விமர்சனம். பிரேமச்சந்திரன் தமிழில் பேசினார்; எனக்கு தமிழ் தெரியும். உமக்கு தமிழ் தெரியாது அதனால் அவர் பேசியதை உம்மால் விளங்க முடியாது.

கடந்த ஆண்டு நீங்கள் எல்லாரும் கட்டில்களின் கீழ் இருந்தீர்கள். நாம்தான் நெருக்கடியைச் சந்தித்தோம்.

டி சில்வா: நீங்கள் எல்லோரும்தான் கட்டில்களின் அடியில் இருந்தீர்கள். [இ-எ]

மொஸாட் விசாரணை ஆணைக்குழு முன்

# ஜே. ஆரின் மருமகளும் சாட்சியம் அளிப்பார்!

கொழும்பு, நவ. 14

மொஸாட் உளவு ஸ்தாபனம் இலங்கையில் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட தனிநபர் ஆணைக்குழுமுன்னிலையில் முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் மருமகள் திருமதி பென்னி ஜெயவர்த்தனாவும் சாட்சியம் அளிக்க இருக்கிறார்.

திருமதி பென்னி ஜெயவர்த்தனா ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கத் தானாகவே முன் வந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

மொஸாட் முன்னாள் ஏஜண்ட் எழுதிய புத்தகத்தில் இஸ்ரவேலுக்கு திருமதி பென்னி மேற்கொண்ட இரகசியப் பயணம் பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதுவரை பிரதிப் பொலீஸ் மா அதிபர் ஒருவர், இராணுவ பிரிகேடியர் ஒருவர், மகாவலி அமைச்சின் முன்னாள் செயலாளர் ஒருவர் ஆகியோரை ஆணைக் குழு விசாரணை செய்துள்ளது [ஒ எ]


## ஷப்ரா
### யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்

எமது அலுவலகம் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் மீண்டும் பழைய இடத்தில் 207, மின்சார நிலைய வீதியில் இயங்கத் தொடங்குகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

இடமாற்றத்தின் பொருட்டு இன்றும் நாளையும் அலுவலகம் திறக்கப்பட மாட்டாது.

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (சி 5414)


## மரண அறிவித்தல்

### சூசை பிரகாசம்

அச்சுவேலி விளங்கியவத்தையைச் சேர்ந்த சூசை பிரகாசம் (அரியகுட்டி) அவர்கள் பருத்தித்துறை புனித அந்தோனியார் பதியில் காலமானார். இவர் காலஞ்சென்ற பிரகாசியின் கணவரும், ஆரோக்கியநாதன், அன்ரனி (ஆசிரியர்), சூசைப்பிள்ளை, பசில் ராஜ்குமார் (Eng, K S.A), ஆரோக்கியம்மா, அந்தோனியம்மா, அமலோற்பவநாயகி, கில்டா ஆகியோரின் அன்புத் தந்தையும், அருட்பிரகாசம், அமிர்தநாதன் (ஆசிரியர்), அல்பிறெட், லூர்த்தம்மா, அன்னராணி, மேரியசிந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை காலை 10 00 மணிக்கு பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக அச்சுவேலி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S. அமிர்தநாதன் (ஆசிரியர்)
(மருமகன்)

விளங்கியவத்தை,
அச்சுவேலி. (14294)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 14 - 11 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## கல்லடியில் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், நவ. 14

மட்டக்களப்பில் கல்லடி மஞ்சந்தொடுவாய் பகுதிகளை நேற்று முன் தினம் இராணுவத்தினரும் தமிழ்க் குழு ஒன்றைச் சேர்ந்தவர்களும் கூட்டாகச் சுற்றி வளைத்தனர்.

அப்போது விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான புளியான் (மகிழந்தீவு) சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்தார். [ஒ]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், நவ. 14

கடந்த திங்களன்று யாழ் மாவட்டத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் கதிர் (மு ஐங்கரன் – சித்தன் கேணி) என்ற போராளி வீரமரணமடைந்தார். [உ]

## நாளை பட்ஜெட்

நாளை வியாழக்கிழமை பிரதமரும் நிதி அமைச்சருமான டி. பி விஜேதுங்க நாடாளுமன்றத்தில் 1991ஆம் ஆண்டுக்கான புதிய உத்தேச வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பார் என்று அறிவிக்கப்படுகிறது. (இ – எ)

# ஊறணி சிப்பாய்கள் மீது புலிகள் கிரனேட் வீச்சு!

யாழ்ப்பாணம், நவ. 14

கடந்த ஞாயிறன்று காலை 8 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஊறணி இராணுவ முகாமிலிருந்து சிவில் உடையில் வெளியே வந்த இரண்டு சிப்பாய்கள் மீது – முகாமிலிருந்து 200 யார் தூரத்தில் வைத்து – கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் ஒரு சிப்பாய் உயிரிழந்தார். மற்றையவர் காயமுற்றார்:

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

உயிரிழந்த சிப்பாயின் சடலத்தை எடுக்க வந்த இராணுவத்தினர் பொதுமகன் ஒருவரைக் கத்தியால் குத்தியதாகவும் –

படுகாயமுற்ற அந்த நபர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும்—

அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. [உ]

## அருள் - 89 தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 14

வவுனியா மாவட்டத்திலுள்ள 35 ஆம் கொலனி இராணுவ முகாம்மீது கடந்த ஞாயிறன்று விடுதலைப் புலிகள் அருள் 89 தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிவரம் தெரியவரவில்லை. [உ]

## வ, பி. போ. ச ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பணம் தருமாறு கேட்டார்,

வ. பி. போ. சபை ஊழியர்களுக்குத் தொடர்ந்தும் சம்பளப் பணம் தரக்கூடிய நிலையில் மத்திய சபை இல்லை. வட பகுதியில் பஸ்களை சேவையில் ஈடுபடுத்தி வ. பி. போ. சபை தனது ஊழியர்களுக்குச் சம்பளத்தை வழங்கட்டும் – என்ற தமது நிலைப்பாட்டை மத்திய போக்குவரத்துச் சபை அதிகாரிகள் அப்போது வெளியிட்டனர். [அ-3]

## கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 14

கிராமிய உற்பத்திக் குழுக்களின் நல்லூர்ப் பிரதேச பொதுக் கூட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். நல்லூர்ப் பிரதேச கிராமிய உற்பத்திக் குழு உறுப்பினர், கிராம சேவையாளர் அனைவரும் சமுகமளிக்கும்படி தமிழீழ ஆய்வு நிறுவனம் கேட்டுக்கொள்கிறது. [ஒ]

## திருமலையில்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ழந்ததாகவும், இருவர் காயமுற்றதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

இதேசமயம்—

அன்றையதினம் வில்கம் விகாரை இராணுவ முகாம் மீது அருள் 89 தாக்குதலும் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ]

## மரண அறிவித்தல்

### திருமதி சிவக்கொழுந்து முருகேசு

புங்குடுதீவைச் சேர்ந்த திருமதி சிவக்கொழுந்து முருகேசு காலமாகிவிட்டார். இவர் முருகேசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செ. அன்னப்பிள்ளை (சாமி அம்மா), நா. விசாலாட்சி, சி. சரவண முத்துச்சாமியார் (திருவாசக மடம், திருக்கேதீஸ்வரம்), காலஞ்சென்ற க. இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (14-11-90) இன்று புதன்கிழமை 12 மணியளவில் மணற்காடு மயானத்தில் நடைபெறும் என்பதை உறவினர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
நா. சிவபாதன்

ஆலடிச்சந்தி,
புங்குடுதீவு. (14295)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org